श्रीमदुनिषद्-ब्रह्मेन्द्र-योगिभिः कृता श्रीरामाष्टपदी

सानुवादा

ஸ்ரீமத் உபநிஷத் ப்ரஹ்மேந்த்ர யோகிகளால் இயற்றப்பட்ட ஸ்ரீ ராமாஷ்டபதி - தமிழ் மொழிபெயர்ப்புடன்

Ramashtapadi of Upanishad Brahmendra Yogi
with Tamil translation

Source: Adyar Library
Procured for personal research work: Dr. Aravindh Ranganathan.
This is provided for educational and research use. No part of this is to be used for commercial purposes
Tamil translation: Smt. Vidya Jayaraman
Accompanying Audio: **The Lost Melodies**

சில குறிப்புகள்:

- **श्रीरामतुभ्यं नमोऽस्तु** என்ற அஷ்டபதியில் "த்வம்" (நீ) **- तुभ्यम्** - உனக்கு என்பது நான்காம் வேற்றுமையில் இருப்பினும், "ஶ்ரீ ராம" என்று ராமரை விளித்து வணங்குவதாலும், ஸம்போதானத்தில் வேறு கீதம் இன்மையாலும் இந்த முதல் அஷ்டபதி ஸம்போதனத்தில் அமைந்துள்ளதாக கருதலாம். பேரா. வே. ராகவன் அவ்வாறே கொள்கிருர்.

- இதில் அகாராதி க்ஷகாராந்தமாக வரிகளை அமைத்துள்ளார். இதை 51 வர்ணங்கள் அமைந்த மாலையை அணிவிப்பதாக ஶ்லோகத்தில் சொல்கிருர். வ்யாகரணுதிகளின் அடிப்படையில் தீர்க்க ॡ போன்றவை இல்லையெனிலும் மந்த்ர சாஸ்த்ர அடிப்படையில் இவைகளைச் சேர்த்தே 51 அக்ஷரங்கள்.

- ஶ்ரீமத் உபநிஷத் ப்ரஹ்மேந்த்ர யோகிகள் சிறந்த அத்வைத ஸந்யாஸி. த்ரிபாத்ராம என்ற பதம் இவர் செய்த கீதங்களில் அடிக்கடி வரும். 108 உபநிஷதங்களில் ஒன்ருனது த்ரிபாத்விபூதிநாராயண உபநிஷத். இந்நூலில் ராம யந்த்ர நிர்மாணம் குறித்த விஷயங்களும் உள்ளன. ஶ்ரீ உபநிஷத் ப்ரஹ்மேந்த்ர யோகிகள் வழிபட்ட ராமயந்த்ரம் இன்றும் அவருடைய ஆஶ்ரமத்தில் காணலாம். இதில் உள்ள ஸ்வரூபத்தை இவரது ஏழாவது அஷ்டபதியில் "**चक्रराट् षट्कोणमध्यविहारे**" என்று குறிப்பாகக் கூறுகிருர்.

- ப்ரஹ்மத்தின் மூன்று பாதங்களாக சொல்லப்பட்ட வித்யா ஆனந்தம் துரீயம் முதலிய தத்வங்கள் இவரால் அத்வைத ரீதியாக விளக்கப்படுகின்றன. அதே போல துரீயத்தின் விபாகங்களாக துரீயதுரீயம், துர்யாதீதம் முதலிய கோட்பாடுகளையும் விளக்குகிருர். ராமனை பரப்ரஹ்மத்தின் வடிவாகக் காண்கிருர்.

- இவ்வாறு வேதாந்த ஶாஸ்த்ரவிஷயகமான சில ஶப்தப்ரயோகங்கள் இவரது அஷ்டபதிகளுக்கு முன்பு இயற்றப்பட்ட ஶ்லோகங்களில் தென்படுகிறது.

- அது மட்டுமன்றி முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கீர்த்தனமான "**श्रीगुरुगुहस्य दासोऽहं नो चेत् श्रीगुरुगुह एवाहम्**" என்ற வரிகளில் இவருடைய தாக்கம் தென்படுகிறது. மேலும் இவர் ராமனை ப்ரஹ்மா-விஷ்ணு-சிவன் மூவரும் வணங்குவதாகப் பாடுகிருர். மும்மூர்த்திகளும் ராமனின் குணுதிசயங்களை வியக்கும் 'மும்மூர்த்துலு' என்ற த்யாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனை போன்றவற்றின் மீதும் இவரது ப்ரபாவம் இருப்பதை உணரலாம்.

- இவரது பிற க்ரந்தங்களிலொன்று மஹாவாக்ய ரத்னுவலி என்ற வ்யாக்யானம் ஒன்றும் உள்ளது. இந்த 108 மஹாவாக்யங்களைப் பற்றிய குறிப்பு இவரது பஞ்சம்யந்த அஷ்டபதியில் உள்ளது.

- அகாராதி வரிசையில் உள்ள கீதத்தில் ஏகாக்ஷர கோஷாதிகளிலிருந்து தாத்பர்யத்தின் அடிப்படையில் பொருத்தமான அர்த்தம் எடுக்கப்பட்டுள்ளது.

- சிவப்புநிறத்தில் அச்சுப்பிழை மற்றும் நீலக்குறியில் அனுமானிக்கப்பட்ட திருத்தமும் சுட்டப்படுகிறது.

॥ श्रीरामाष्टपदी-प्रारम्भः ॥

ॐ

॥ श्रीमद्विश्वादिष्ठान-परमहंस-सद्गुरुश्री-रामचन्द्राय नमः ॥

स्वाविद्यापद-तत्कार्य-त्रैपद-वैभवम् ।
श्रीरामचन्द्र-साम्राज्यं नौमि सच्चित्-सुखात्मकम् ॥
नत्वा श्रीमद्देशिकेन्द्रं कैवल्य-पदमिच्छताम् ।
तदाप्तये त्रिपाद्राम-गीतावलिरुदीर्यते ॥
अष्टाविंशाधिक-शत-गीत-रत्नाकरोत्तमे ।
आद्यं त्रयोदश-पदं शिष्टं त्वष्टपदं भवेत् ॥
श्रीराम-शब्द-सम्बुद्ध्या साकमष्ट-विभक्तिकः ।
एकैकस्या विभक्तेस्तद्गीतं षोडशधोच्यते ॥
पञ्चाशद्वर्ण-सन्मालालङ्कारवर-कन्धर ।
श्रीमत्त्रिपाद्रामचन्द्र नमस्तुभ्यं पुनः पुनः ॥

ஆத்மஸ்வரூபத்தை (மறைக்கும்) அவித்யை மற்றும் அதன் செயல்பாடுகளால் ஏற்பட்ட மூன்று பாதங்களைக் (வித்யா, ஆனந்தம் மற்றும் துரீயம்) கொண்ட (ப்ரஹ்மத்தின்) ஸச்சிதானந்த ஸ்வரூபமாக இருக்கும் ஸ்ரீ ராமசந்த்ரனுடைய (மோக்ஷ) ஸாம்ராஜ்யத்தை வணங்குகிறேன்.

ஸ்ரீ குருவை வணங்கியபின், முக்தியை விரும்பியோர்க்கு அது கிடைப்பதற்காக த்ரிபாத்ராமனுடைய கீதங்கள் வரிசையாக சொல்லப்படுகின்றன.

128 கீதங்கள் கொண்ட கீத ஸமுத்ரத்தில் முதல் (கீதமானது) 13 பதங்கள் (கொண்டதாகவும்) எஞ்சியவை எட்டு பதங்கள் ஆக உள்ளது.

ஸ்ரீ ராம என்ற பதத்தை ஸம்போதனத்துடன் (விளி வேற்றுமை உட்பட) சேர்த்து எட்டு விபக்திகள் கொண்டது. ஒவ்வொன்றும் ஒரு விபக்தியில் என கீதம் பதினாறாக முதலில் சொல்லப்பட்டது.

51 (அக்ஷரங்கள் அமைந்த) வர்ணமாலா ரூபமாக அலங்கரிக்கப்பட்ட கழுத்தை உடைய ஸ்ரீ த்ரிபாத் ராமசந்த்ர! உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். (வ்யாகரணரீதிகளின் அடிப்படையில் தீர்க்க ॡ போன்றவை இல்லையெனில் மந்த்ர சாஸ்த்ர அடிப்படையில் இவைகளைச் சேர்த்தே 51 அக்ஷரங்கள்.)

प्रथमखण्डः

श्रीराम तुभ्यम् - गीतम् - बिलहरिरागः

पल्लवी

श्रीराम तुभ्यं नमोऽस्तु भो राम ते नाम वाचि ममास्तु ।
तव [हृ] दक्षपादो हृद्यस्तु विदेहकैवल्यभाग्यं ममास्तु ॥ श्री ॥ १
अद्भुतत्वद्भक्तिरस्तु आवयोरन्तरं कदापि मास्तु ।
इन्दिरा मत्कैवल्येऽस्तु ईश्वर त्वद्भक्तिबृन्दक्षेमोऽस्तु ॥ श्री ॥ २
उत्कृष्टतत्त्वं ममास्तु ऊर्ध्वादिदिग्व्यापि मज्ज्ञानमस्तु ।
ऋतवाख्यातिस्तवास्तु ॠकारार्थमोहवैरल्यमस्तु ।। श्री ॥३
ऌमायाविद्वेषो मे[मा] स्तु ॡमोहग्रासनिर्मोहचिन्मेऽस्तु ।
एकमेवाद्वैतं मेऽस्तु ऐश्वरदिव्यविज्ञानं ममास्तु ।। श्री ॥ ४
ओङ्काररलक्ष्ये हृन्मेऽस्तु औपाधिकातीतानन्दो ममास्तु ।
अंतमविद्यायां मेऽस्तु अःकारमायामृत्युभावमस्तु ॥ श्री ॥ ५
कल्याणरामो हृद्यस्तु खलषड्वर्ग निग्रहो ममास्तु ।
गीतावेद्यरतिरस्तु घोरसंसारस्त्वद्भक्तेषु मास्तु ॥ श्री ॥ ६
ङार्णविषशान्तिरस्तु चक्रराजागारतैव ममास्तु ।
छन्दश्शिरो वाचि मेऽस्तु जीवब्रह्मैक्यं निरङ्कुशमस्तु ॥ श्री ॥ ७
झषकुलेशकृपा मेऽस्तु ज्ञानविज्ञानसम्यग्ज्ञानं मेऽस्तु ।
टभवरुक्छान्ति मे[र] स्तु ठचन्द्रशीतलं मच्चित्तमस्तु ॥ श्री ॥ ८

डजविषग्रासो मेऽ[मा] स्तु ढलक्ष्यैक्यनित्यसंपन्ममास्तु ।

णलक्ष्याचित्सिद्धिरस्तु त्रिपात्तुर्यत्तुर्यचैतन्यं मेऽस्तु ॥ श्री ॥ ९

थधर्मप्रवृत्तिरस्तु दास्यं सीतापतेर्नित्यं ममास्तु ।

धीलक्ष्यसंविन्ममास्तु निर्गुणब्रह्मात्मरूपं ममास्तु ॥ श्री ॥ १०

परमानन्दो ममास्तु फणीशपर्यङ्कशायिदयास्तु ।

बन्धमोक्षभ्रान्तिर्मास्तु भक्तपटलकटाक्षो ममास्तु ॥ श्री ॥ ११

मायाकार्यावेशो मास्तु योगमुख्यफलचिद्रूपं मेऽस्तु ।

रामचन्द्रभक्तिरस्तु लोकदेशिकोपदेशो ममास्तु ॥ श्री ॥ १२

विष्णुता सर्वत्र मेऽस्तु शान्ताविद्याद्वयतत्कार्यमस्तु ।

षड्गुणैश्वर्यं ममास्तु सत्यप्रतिज्ञाबिरुदं तवास्तु ॥ श्री ॥ १३

हृदि त्वद्दक्षपादोऽस्तु ळशक्तिशक्तिदपरचिन्मेऽस्तु ।

क्षीराब्धिशायिभावोऽस्तु श्रीरामचन्द्रेन्द्र कैवल्यं मेऽस्तु ॥१४

॥ ॐ ॥

ஸ்ரீராம! உனக்கு நமஸ்காரம்! ஓ ராம! உன் நாமம் என் வாக்கில் இருக்கட்டும்! உன்னுடைய நைபுண்யம் பொருந்திய திருவடிகள் என் இதயத்தில் இருக்கட்டும்! விதேஹ முக்தி என்ற பெரும் பாக்யம் எனக்கு கிட்டட்டும். (१)

உன்னிடத்தில் அத்புதமான பக்தி தோன்றட்டும். நம்மிடையே இடைவெளி எப்போதும் இல்லாமல் இருக்கட்டும். என்னுடைய முக்தியில் லக்ஷ்மீ (கடாக்ஷம்/அனுக்ரஹம்) இருக்கட்டும். ஓ இறைவா! உன்னுடைய பக்தர் கூட்டத்தில் நன்மை இருக்கட்டும். (२)

மேலான உனது தத்வம் என்னுடையதாக இருக்கட்டும். மேல் நோக்கிச் செல்வதாக என் ஞானம் இருக்கட்டும். ருதத்தில் (தார்மீகமான உலக நியதி என்று ஸ்தூலமாக பொருள் கொள்ளலாம்) உன்னுடைய பெருமை இருக்கட்டும். பாம்பைப் போன்ற மோஹம் குறைவாக இருக்கட்டும். (३)

மலை போன்ற மோஹம் விழுங்குகையில் மோஹமற்ற தன்மை உள்ள புத்தி என்னிடம் இருக்கட்டும் இவ்வுலக விஷயமாக மாயையும் த்வேஷமும் என்னிடம் இல்லாமல் போகட்டும். இரண்டற்ற ஒன்றே என்னுள் இருக்கட்டும்! ஈஶ்வரனைப் பற்றிய புனிதமான ஞானம் என்னுடையதாக ஆகட்டும். (४)

ப்ரஹ்மவித்யையில் என்னுடைய (மனம்) இருக்கட்டும். மாயையால் ஏற்படும் தோற்றங்களுக்கு அழிவு உண்டாகட்டும். என் ஹ்ருதயம் ஓம்கார லக்ஷ்யத்தில் இருக்கட்டும். உபாதிகளுக்கு அப்பாற்பட்ட ஆனந்தம் என்னுடையதாக இருக்கட்டும். (५)

கல்யாணராமன் என் ஹ்ருதயத்தில் இருக்கட்டும்! தீமை செய்யும் (காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யங்கள்) என்ற (பகைவர்களான) ஆறினை ஒதுக்குதல் என்னுடையதாக இருக்கட்டும்! கீதத்தை அளிக்கும் ஆசை இருக்கட்டும்! கோரமான சம்சாரம் உன்னுடைய பக்தர்களுள் இல்லாமல் இருக்கட்டும் (६)

உன் சக்ரமெனும் (ராம யந்த்ரம்) தங்குமிடம் மட்டுமே என்னுடையதாகட்டும். விஷய ஆசைகள் என்ற கடலின் ஶாந்தம் உண்டாகட்டும். உபநிஷதங்களில் என் வாக்கு லயிக்கட்டும். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றென்ற கொள்கையில் தங்கு தடையற்றதாக இருக்கட்டும் (७)

(மத்ஸ்யாவதாரம் செய்தவரானதால்) மீன் குலத்தின் அரசரின் க்ருபை என்னிடம் இருக்கட்டும். ஞானம் விஞ்ஞானம் என்ற சரியான ஞானம் என்னுடையதாக ஆகட்டும். ரோகமான சம்சாரத்தின் சாந்தி என்னுடையதாக ஆகட்டும். சந்த்ரமண்டலத்தின் குளுமை என் புத்தியாக இருக்கட்டும் (८)

கடலில் உண்டாகும் விஷமிக்க முதலைகள் இல்லாமல் போகட்டும்! பறைசாற்றும் ஒரே நோக்கமாகிய நித்யமான செல்வமான முக்தி என்னுடையதாக ஆகட்டும்! வித்யையின் நோக்கம் என் சித்தத்தில் கிட்டட்டும். மூன்று பாதங்கள் கொண்ட அந்த சைதன்ய ஸ்வரூபமானது என்னுடையதாக ஆகட்டும் (९)

அறிவின் நோக்கமான ஞான ஸ்வரூபமான பேரொளி எனதாகட்டும். காக்கும் தர்மத்தில் ப்ரவ்ருத்தி இருக்கட்டும். சீதையின் தலைவனிடத்தில் அடியவனுகை இருக்கும் தன்மை எப்போதும் என்னுடையதாக ஆகட்டும் (१०)

பேரானந்தம் என்னுடையதாக இருக்கட்டும், பாம்பணை மேல் துயில்பவரின் தயை இருக்கட்டும். பிறப்பு இறப்பு என்ற இரு நிலைகளான குழப்பம் இல்லாதிருக்கட்டும். பக்தர் கூட்டத்தின் கடாக்ஷம் எப்போதும் என்னுடையதாக இருக்கட்டும் (११)

மாயையின் செயல்பாடுகளால் உள்ள தாக்குதல் இல்லாதிருக்கட்டும். யோகத்தின் முக்ய பலனுன சித்ரூபம் என்னுடையதாக இருக்கட்டும். ராமசந்த்ரனிடத்தில் பக்தி இருக்கட்டும்! உலகில் குருவின் உபதேசம் என்னுடையதாக இருக்கட்டும் (१२)

(ஶமம் தமம் உபரதி, திதிக்ஷா, ஶ்ரத்தா, ஸமாதானம்) ஆகிய ஆறு குணங்களெனும் செல்வம் எனதாகட்டும். விஷ்ணுத்தன்மை எங்கும் என்னுடையதாக இருக்கட்டும். ஸத்யத்துக்கு கட்டுப்பட்டவன் என்ற விருது உனதாக இருக்கட்டும். (१३)

அனந்த ஶக்தியும் ஶக்தியை அளிக்கும் அந்த பரப்ரஹ்மம் என் சித்தத்தில் ஒளிரட்டும். ஹ்ருதயத்தில் உன்னுடைய ஶக்தி வாய்ந்த திருவடிகள் இருக்கட்டும். ஶ்ரீ ராமசந்த்ரேந்த்ர! முக்தி நிலை என்னுடையதாக இருக்கட்டும்! (१४)

ॐ

****

॥ अथ प्रथमान्तगीतमुच्यते ।

अयि रघुवर सीताकान्त सच्चित्सुखात्मा

चरमजनिभृदाप्या विद्वरिष्ठेन्द्रहृद्या ।

विधिहरिहरसेव्या या हि कैवल्यसंप

द्विलसतु मयि भृत्ये तावकी राम मूर्त्तिः ।

*अयि என்ற சொல் விளி, ஸகாவை அழைத்தல், விசாரித்தல் ஆகிய பல பொருள் கொண்டது.

ஓ ரகுகுலத்தில் சிறந்தவரே! சீதையின் மணாளரே! ஸச்சிதானந்த ஸ்வரூபமாக உள்ளவரே!

இந்த ஜன்மமே கடைசியாக இருக்கட்டும் என்னும் நிலையை அடைவதற்கானதும், கற்றறிந்த சான்றோர்களுள் தலைமையானவர்களின் ஹ்ருதயத்தில் இருப்பதுமானதும் ப்ரஹ்மா-விஷ்ணு-சிவன் ஆகியோர் வணங்குவதானதும் , எது முக்தியெனும் செல்வமானகவும் உள்ளதோ அப்படிப்பட்ட உன் மூர்த்தியானது அடியேனுள் விளங்கட்டும்!

॥अयि श्रीराम - नाटै रागः ॥

पल्लवी

अयि श्रीराम तावकमूर्तिर्मयि विलसतु विदेहमुक्तिः ॥

प्राणादिनामान्तद्व्यष्टकला सञ्जातनानाप्रपञ्चमाला ।

यस्यां चित्येव सर्गादिलीला मापन्ना सेह चिदेवाकला ॥ अयि ॥ १

मायाकार्यकल्पितसंवेद्यग्रासत्वेनाङ्गीकृतचिद्विद्या ।

समस्त वेदवेदान्तवेद्या विदेहकैवल्यस्वरूपाद्य ॥ अयि ॥ २

स्वनामभजनभक्ताधीन सर्वत्रविजृम्भितचिद्भाना ।

स्वसत्ताकबलीकृतनाना भक्तालिहृत्कमलविभाना ॥ अयि ॥ ३

स्वभक्तज्ञानालिग्रासदक्षा स्वसेवकालिरक्षाणदीक्षा ।

नारदादिमौनिहृद्यपक्षा वितरणपटुस्थूललक्षा ॥ अयि ॥ ४

उन्मार्गगामिजन्तुशिक्षणा सन्मार्गगामिजन्तुरक्षणा ।

चराचरविश्वविलक्षणा सत्यविज्ञानानन्दलक्षणा ॥ अयि ॥ ५

अत्यद्भुताखण्डतेजोरूपा भावाभावकलाग्रासरूपा ।

नानाद्वैतातीताद्वैतरुपा भक्ताभयदश्रीरामभूपा ॥ अयि ॥ ६

स्वाविद्याद्वयकलङ्कहीना निष्कलङ्कपराक्षरभाना ।

कायाद्यवहृदयविमाना त्रैपदनारायणाभिधाना ॥अयि ॥ ७

स्वाविद्याद्वयतत्कार्यजात-ग्रासनिरविघ्नत्वेनभाता ।

श्रीरामचन्द्रहृदिख्याता विकलेबरकैवल्यभूता ॥ अयि ॥ ८

ॐ

ஓ ஸ்ரீராம! உன்னுடைய வடிவமயமாக விதேஹ முக்தியாக விளங்குகிறது.

ப்ராணன் முதல் நாமம் வரையிலான பதினாறு பகுதிகளைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட வெவ்வேறு உலக வரிசைகள், யாருடைய புத்தியில் ஸ்ருஷ்டி என்ற லீலையாகத் தோன்றியதோ அது இங்கே சைதன்யமாகவே இருக்கிறதோ (ஓ ஸ்ரீராம! ..) - १

**அவையாவன:ப்ராணம்(ஹிரண்யகர்ப்ப), ஶ்ரத்³தா⁴, ஆகாயம் முதல் ப்ருதிவீ வரையிலான பஞ்ச மஹாபூதங்கள் (5) இந்த்ரியம், மனஸ், அன்னம், வீர்யம், தபஸ், மந்த்ரம், லோகம், கர்ம, நாம)

மாயாசக்தியின் செயல்பாட்டால் கல்பிக்கப்பட்டு மறைக்கப்பட்டதாக அறியக்கூடியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சைதன்யத்தைப் பற்றிய ஞானமாகவும், அனைத்து வேத வேதாந்தங்களாலும் அறியப்படுவதுமானதும், முதலானதும், விதேஹ முக்தி ஸ்வரூபமாகவும் (ஓ ஸ்ரீராம! ..) - २

தன் நாமத்தை பஜிக்கும் பக்தர்களுக்கு நம்பிக்கைக்குரியதாகவும், எங்கும் வ்யாபித்த சிதாகாரமாக இருப்பதும், தன் ஸத்தா ஸ்வரூபம் விழுங்கப்பட்ட பல்வேறு (உருவங்களில்) பக்தர்கள் கூட்டமெனும் தாமரைக்கு (ஸூர்ய) ஒளியாக இருப்பதுமான (ஓ ஸ்ரீராம! ..) - ३

தன்னுடைய பக்தர்களின் அஞ்ஞானத் திரள்களை நீக்குவதில் நைபுண்யம் கொண்டதாகவும், தன்னுடைய தாஸர்கள் குழுவைக் காப்பதில் த்ருடமாக இருப்பதாகவும், நாரதர் முதலிய முனிவர்களின் ஹ்ருதயத்தைத் தன் பக்கம் கொண்ட, கரை ஏற்றுவதில் ஸாமர்த்யம் உள்ள உருவக் குறிப்புமான (ஓ ஸ்ரீராம! ..) - ४

தீயவழியில் செல்லும் ஜீவன்களை தண்டிப்பது, நல்வழியில் செல்லும் ஜந்துக்களைக் காப்பது, அசையும் அசையா பொருட்கள் கொண்ட உலகிலிருந்து வேருக இருப்பது, ஸத்யம் ஞானம் ஆனந்தம் ஆகியவற்றைத் தன் (ஸ்வரூப) லக்ஷணமாகக் கொண்ட (ஓ ஸ்ரீராம! ..) - ५

அத்புதமான அகண்டமான தேஜஸ் ஸ்வரூபமாகவும், இருத்தல் இல்லாதிருத்தல் ஆகிய பகுதிகளை நீக்கும் உருவமாய், பல்வேறு த்வைத நிலைகளுக்கு அப்பாற்பட்ட அத்வைத ஸ்வரூபமாய், பக்தர்களுக்கு அபயமளிக்கும் ஸ்ரீராமன் என்னும் அரசனாய் (ஓ ஸ்ரீராம! ..) - ६

ஆத்ம ஸம்பந்தமான அவித்யை என்னும் அழுக்கு அற்றதாகவும், அப்பழுக்கற்ற அழிவற்ற பரம்பொருளாகத் தோன்றுவதாகவும் உடல் உள்ளம் முதலியவற்றை நடத்திச் செல்வதும்,(சைதன்யமாக உள்ளதும்) மூன்று பாதங்கள் கொண்ட நாராயணன் என்ற பெயர் கொண்ட (ஓ ஸ்ரீராம! ..) - ७

ஆத்ம ஸம்பந்தமான அவித்யை அதன் காரணமாகத் தோன்றும் த்வைதபாவனை மற்றும் அதனுல் உண்டாகும் செயல்களை மறைத்து அவித்யை இல்லாத்தன்மையதாய் உள்ளதும், ஸ்ரீ ராமசந்த்ரன் என்று ஹ்ருதயத்தில் நன்ருய் விளங்குவதும், விதேஹ முக்தியாகவே உள்ள ॥ (ஓ ஸ்ரீராம! ..) - ८

ॐ

****

द्वितीयान्तगीतम्

स्वाविद्यातत्कार्यग्रामं मनसा नापि स्मरामि मिथ्येति ।

कलये कैवल्यरामं प्रत्यगभिन्नपरं ब्रह्मास्मीति ॥

ஆத்மவிஷயமான அவித்யை மற்றும் அதன் செயல் கூட்டங்களை அவை மித்யை என்பதால் மனதாலும் நினைக்க மாட்டேன். முக்தி (எனும் ஆனந்த ஸ்வரூபமான) ராமனை ஆத்மாவைத் தவிர வேறென்றும் அல்லாத (பரம்பொருளை) நானே ப்ரஹ்மம் என்று நாடுவேன்.

रामम् - यदुकुलरागः - त्रिपुटतालम्

पल्लवी

रामं कलये सोऽहमस्मीति त्रैपदरामं कल्याणरामं कैवल्यरामं कोदण्डरामं ।

रामं भक्तपटलाभिरामं मुक्तिसीताकुमुदसोमम् ।

स्वेतरवस्तुग्रसनकामं विदहकैवल्यपट्टाभिरामम् ॥ रा ॥ १

भातं चराचरविश्वतातं स्वाविद्यापादवार्धिपोतम् ।

नारदादिहृदयाविर्भूतं तत्त्वज्ञानिबृन्दे सकृद्विभातम् ॥ रा ॥ २

तारं समस्तवेदान्तसारं संसारपारावारपारम् ।

प्रणतभक्तपटलोद्धारं नमन्ति यं यतयो वारंवारम् ॥ रा ॥ ३

ज्ञानं भक्तपटलैकतानम् अतद्व्यासवेदान्तमानम् ।

सनकादिमौनिहृदिविमानं त्रिपाद्विभूतिनारायणभानम् ॥ रा ॥ ४

बालं वैजयन्तीवनमालं धर्माधर्मसागरवेलम् ।

भक्तपटलरक्षणशीलं वेदमस्तकेडितानन्तलीलम् ॥ रा ॥ ५

पात्रं भूमब्रह्मानन्दगात्रं नतकामपिशाचवेत्रम् ।

स्वाविद्यापादभासकनेत्रं कोसलराजसुतावरपुत्रम् ॥ रा ॥ ६

मोक्षंस्वाविद्यामोचनदक्षं भक्तपटलनित्यपक्षम् ।

स्वतत्त्वज्ञानिनित्यापरोक्षं कैवल्यवितरणस्थूललक्षम् ॥ रा ॥ ७

इन्द्रं स्वभक्तावने निस्तन्द्रं वेदमस्तकवेद्योपेन्द्रं ।

निरङ्कुशभूमानन्दसान्द्रं स्वदत्तकैवल्यरामचन्द्रेन्द्रम् ॥ रा ॥ ८

அவனே நான் (என்ற அத்வைத பாவனேயுடன்) ராமனே நாடுவேன். மூன்று பாதங்கள் (வித்யா, ஆனந்தம், துரீயம்) கொண்ட ப்ரஹ்மஸ்வரூபமான ராமனே, கல்யாணராமனே, முக்தி (என்னும் ஆனந்தமேயான) ராமனே, கோதண்டராமனே

ராமனே பக்தர் கூட்டங்களே மகிழச்செய்பவரை, முக்தி ஸ்வரூபமேயான சீதை என்னும் ஆம்பல் பூக்கச் செய்யும் சந்த்ரனே, தன்னுடையது பிறருடையது என்பதை நீக்குவதில் ஆசை உள்ளவரை, விதேஹ முக்தி (விதேஹ தேசத்திற்கு பெருவாழ்வான) ஸ்வரூபமாக உள்ள பட்டாபிராமனே - (௧)

தோற்றமாகிய அசையும் அசையாப்பொருட்கள் கொண்ட உலகின் தந்தையை , தன்னுடைய அவித்யாபாதத்தைக் கடக்க உதவும் படகை - (௨)

ஓம்கார ஸ்வரூபத்தை, அனேத்து வேதாந்தத்தின் ஸாரத்தை, ஸம்ஸாரக் கடலேக் கடக்க வைப்பவரை, வணங்கும் பக்தர் கூட்டத்தைக் கரையேற்றுபவரை, யதிகள் மீண்டும் மீண்டும் யாரை வணங்குவார்களோ அவரை (௩)

ஞானஸ்வரூபமாய் உள்ளவரை, பக்தர்கள் குழுவின் ஒரே த்யேயமாக இருப்பவரை, ஸனகர் முதலிய முனிவர்களின் ஹ்ருதயத்தில் இருப்பவரை, த்ரிபாத்விபூதி நாராயணராக தோன்றுபவரை - (௪)

குழந்தைவடிவில் உள்ளவரை, வைஜயந்தீ மாலே அணிபவரை, தர்மம் அதர்மம் (இருமை - மறுபிறப்புக்கு வழி செய்வன) என்ற ஸமுத்ரத்தை கடக்க வைக்கக் கூடியவரை, பக்தர்கூட்டத்தைக் காப்பதைத் தன் நடத்தையாகக் கொண்டவரை, வேதஶிரமான உபநிஷதங்களால் வணங்கப்பட்ட அளவற்ற லீலேகளேச் செய்பவரை (௫)

நன்னடத்தை உள்ளவரை, உலகில் ப்ரஹ்மானந்தத்தின் உருவானவரை, வணங்குவோரின் காமம் எனும் பிசாசை (ஒட்டக்கூடிய) தண்டத்தைத் தாங்குபவரை தன்னுடைய அவித்யா பாதத்தை ஒளிரச்செய்யும் கண்களே உடையவரை, கோஸல அரசரின் பெண்ணுன (கௌஸல்யாவின்) பூஜிக்கத்தக்க புதல்வரை (௬)

மோக்ஷ ஸ்வரூபமாகவே உள்ளவரை, ஆத்ம ஸம்பந்தமான அவித்யையை விடுவிப்பதில் சக்தி வாய்ந்தவரை, பக்தர்கள் கூட்டத்தை எப்போதும் தன்னருகே வைத்துக் கொண்டவரை, ஆத்ம தத்வத்தை அறிந்த ஞானிகளுக்கு எப்போதும் ப்ரத்யக்ஷமாக இருப்பவரை,மோக்ஷத்தை அளிப்பதில் ஸாமர்த்யமுள்ள உருவமுள்ள சின்னத்தை (௭)

பரப்ரஹ்மத்தை, தன்னுடைய பக்தர்களேக் காப்பதில் சோர்வற்றவரை, வேதத்தின் ஶிரமான உபநிஷதங்களால் அறியப்படும் உபேந்த்ரனே, தடையற்ற ஆனந்த கனஸாரமாக இருப்பவரை, தன்னுல் கொடுக்கப்படும் மோக்ஷத்தை உடைய ராமச்சந்த்ரேந்த்ரனே (௮)

ॐ

****

॥ तृतीयान्तगीतम् ॥

शुकादिभिर्भागवतप्रधानैर्यत्पूर्वमात्तं परमाक्षराख्यम् ।

श्रीरामचन्द्रेण तदेव देयं विदेहकैवल्यविशेषभाग्यम् ॥

சுகப்ரஹ்மம் முதலிய முக்யமான பாகவதர்களால் எது முன்பு பெறப்பட்டதோ, பரம்பொருளான அழிவற்றது என்று பெயர் பெற்றதோ, அதுவே அந்த விதேஹமுக்தி என்னும் விசேஷ பாக்யம் ஸ்ரீராமசந்த்ரனால் கொடுக்கப்பட்ட வேண்டும்.

ॐ

॥ सावेरि - रामेण ॥

पल्लवी

रामेण मे तत्कैवल्यं देयं यत्पुरा श्रीशुकाद्यात्तदायम् ।

स्वाविद्यातत्कार्यविहीनेन तत्त्वज्ञानिपटलगम्येन ।

भागलक्षणयालक्षितेन प्रत्यगभिन्नब्रह्मभानेन ॥ रामेण ॥ १

सर्वेन्द्रियव्याप्तिशून्येन त्रिकालाबाधितविज्ञानेन ।

सत्त्वादिगुणत्रयास्पृष्टेन भेदासहसत्तासामान्येन ॥ रामेण ॥ २

द्वैतजातग्रसनाद्वैतेन तुम्बुरुनारदादिगीतेन ।

स्वानन्यचित्तार्जुनसूतेन मौनिचित्तसकृद्विभातेन ॥ रामेण ॥ ३

ब्रह्मादिदेवैर्भावनीयेन गतरागजपुण्यपापेन ।

नित्यमुक्तालिसेवनीयेन स्वविख्यातसत्यवचनेन ॥ रामेण ॥ ४

समाद्ध्यादिकल्याणरामेण कामरक्षःकोदण्डरामेण ।

स्वानन्यचित्तभक्तरामेण मुक्तिपीठपट्टाभिरामेण ॥ रामेण ॥ ५

स्वाज्ञानतत्कारयाल्यतीतेन मौनिहृदयनित्यभातेन ।

स्ववामाङ्कालङ्कारसीतेन शरणागतदेवजातेन ॥ रामेण ॥ ६

निरुपमकायसुन्द्ररेण सर्वोत्तमकम्बुकन्धरेण ।

दासपटलसमुद्धारेण वेदमस्तकपूगसारेण ॥ रामेण ॥ ७

निरस्ताखिलभेदजातेन स्वाध्यस्तविकारात्यतीतेन ।

योगिधिषणानित्यभातेन रामचन्द्रेन्द्रभाग्यभूतेन ॥ रामेण ॥ ८

ராமனுல் எனக்கு மோக்ஷம் கொடுக்கப்படவேண்டும், எந்த (மோக்ஷமானது) முன்பு ஸ்ரீஶுகர் முதலியவர்களால் பெறப்பட்டதோ

ஆத்ம ஸம்பந்தமான அவித்யை அற்றவரால், தத்வஞானிகள் நிறைந்த கூட்டத்தால் புரிந்துக் கொள்ளப்படவரால், (அவயவம் முதலிய) பகுதிகள் நிறைந்தவர் போன்ற (தடஸ்த) லக்ஷணங்களே குறியாக் கொண்டவரால், (அப்படி இருப்பினும்) ஆத்மதத்வம் அன்றி வேறல்லாத ப்ரஹ்மஸ்வரூபமாக இருப்பவரால் (१)

அனேத்து இந்த்ரிய வ்யாபாரமும் அற்றவரால் (அதற்கு அப்பாற்பட்டவரால்), மூன்று காலத்தாலும் தடையற்ற ஞானவடிவினரால், ஸத்வம் (ரஜஸ் தமஸ்) ஆகிய முக்குணங்கள் (கலந்த மாயையி(ன)ல்) தொடப்படாதவரால், பேத புத்தியற்ற இருத்தல் என்ற நிலேயில் உள்ளவரால் (அனேத்திற்கும் பொதுவான இருத்தல்) - २

த்வைதத்தினுல் உண்டாவதை நீக்கும் அத்வைதப்பொருளால், தும்புரு நாரதர் முதலியவர்களால் பாடப்பட்டவரால், தானன்றி வேறு இல்லே என்ற புத்தியை (உபதேசித்த) அர்ஜுனனின் ஸாரதியால்,முனிவர்களின் மனத்தில் உடனே தோன்றுபவரால் - ३

ப்ரஹ்மா முதலிய தேவர்களால் வணங்கப்படவேண்டியவரால், ஆசையினுல் உண்டாகும் புண்யம் பாபம் (ஆகிய இருமைகள்) அற்றவரால், எப்போதும் முக்தி நிலேயைப் பெற்றவர்களால் வணங்கப்படுபவரால், தன்னுல் புகழடைந்த ஸத்ய வாக்குள்ளவரால், ஸமாதி முதலிய பரம மங்கலங்களேத் தரும் ராமனுல், ஆசையை கட்டுக்குள் வைக்கும் கோதண்டம் தாங்கிய ராமனுல் - (४)

தன்னேத் தவிர்த்து வேருென்றிலும் புத்தியைச் செலுத்தாத பக்தர்களே மகிழ்விப்பவரால், முக்தி பீடத்தின் (சக்ரவர்த்தியாக அமர்ந்து) பட்டாபிஷேகம் செய்துக்கொண்ட ராமனுல் - (५)

ஆத்மவிஷயமான அஞ்ஞானம் அதனுல் உண்டாகும் செயல் கூட்டங்களுக்கு அப்பாற்பட்டவரால், முனிவர்களின் ஹ்ருதயத்தில் எப்போதும் தோன்றுபவரால், சீதையால் அலங்கரிக்கப்பட்ட தன்னுடைய இடது பாகத்தைக் கொண்டவரால், சரணடையும் தேவர்களேக் கொண்டவரால் - (६)

ஒப்பற்ற அழகுள்ள உடலேக் கொண்டவரால், மிகவும் சிறப்புடைய சங்கு போன்ற கழுத்துடையவரால், அடியார் கூட்டத்தைக் கரை ஏற்றி விடுபவரால், உபநிஷதங்களின் நிறைந்த ஸாரமானவரால் - (७)

அனேத்து பேதங்களால் உண்டாக்குவனவற்றை விட்டவரால், தன்னே மறைத்துக் கொண்டிருக்கும் மாற்றங்கள் அனேத்துக்கும் (போலத் தோன்றுபவற்றுக்கு) அப்பாற்பட்டவரால், யோகிகளின் அறிவில் தினமும் ஒளிர்பவரால், ராமச்சந்த்ரேந்த்ரரின் (என்ற முத்ரை கொண்ட யோகியின்) பாக்யமானவரால் / ராமச்சந்த்ரேந்த்ர என்ற பாக்யமே வடிவானவரால் - (८)

ॐ

****

॥ चतुर्थ्यन्तगीतम् ॥

नमो नमस्तुभ्यमनन्तकोटि श्रीरामत्रिपाद्वैभवराघवाय ।

विदेहकैवल्यविशेषसौख्यं त्वत्पादसेवाफलमस्तु मह्यम् ॥

ஸ்ரீராமசந்த்ரனுக்கு, மூன்று பாத வைபவம் கொண்ட ராகவனுக்கு உனக்கு அனந்தகோடி நமஸ்காரம்! விதேஹமோக்ஷம் என்ற விசேஷ ஆனந்தம் மற்றும் உன் பாதத்தில் சேவை செய்த பலன் எனக்கு கிடைக்கட்டும்.

॥ श्रीरामचन्द्राय तुभ्यम् - आरभिरागः ॥

पल्लवी

श्रीरामचन्द्राय तुभ्यं नमोस्तु विदेहकैवल्यसुखं ममास्तु ॥

द्व्यष्टकलावैरल्यान्निष्कलाय शान्तनानासामान्यविशेषाय ।

मायारोगहानान्निरामयाय नित्यमुक्तबृन्दाशास्यमानाय ॥ श्री ॥ १

ब्रह्मादिदेवतापूगभाव्याय निर्गतावरणज्ञानिसेव्याय

सूरिबृन्दनित्यकीर्तितव्याय भक्तालिहृत्कमलध्यातव्याय ॥ श्री ॥ २

सच्चिदानन्दरूपादच्युताय ब्रह्मैवाहमस्मीति भाविताय ।

केशकोट्यंशसुसूक्ष्मभूताय गगनादेरपि बृहत्भूताय ॥ श्री ॥ ३

प्रत्यगाभिन्नपरात्मरूपाय त्रिपुटीग्रसनज्ञेयरूपाय ।

विख्यातपुरुषोत्तमरूपाय सन्यस्तसंसारदण्डिरूपाय ॥ श्री ॥ ४

भागादिलक्षणेभ्यो लक्षिताय वेदमस्तकज्ञानाविर्भूताय ।

सत्त्वादिगुणगणातिरिक्ताय त्रैकालिकविज्ञानविभाताय ॥ श्री ॥ ५

मूलाधारादिषद्चक्रभाव्याय षड्गुणैश्वर्यशुभसंभाव्याय ।

संकल्पातिरिक्तभक्तसेव्याय षण्मतसिद्धान्तज्ञानिभव्याय ॥ श्री ॥ ६

मायातत्कार्यकलनातीताय जीवन्मुक्तपटलभाविताय ।

परमाक्षरोऽस्मीति सेविताय सत्तासाम्योऽहमिति पूजिताय ॥ श्री ॥ ७

सर्वानुभवध्यानविहीनाय हेयाभ्युपादेयदोषहानाय ।

कबलीकृतमायावैभवाय श्रीरामचन्दिरेन्द्रात्तकैवल्याय ॥ श्री ॥ ८

ஸ்ரீராமசந்த்ரனாகிய உனக்கு நமஸ்காரம்.விதேஹமுக்தி சுகம் என்னுடையதாகட்டும்.

பதினாறு கலைகள் (அவர் பேரொளிக்கு) மிகவும் குறைவாக இருப்பதால் கலைகள் அற்றவருக்கு, பற்பல பொதுவானவையும் குறிப்பானவைகளும் அடங்குமிடத்துக்கு, மாயை எனும் வ்யாதியால் பாதிக்கப்படாமல் ஆரோக்யமான வருக்கு, முக்தி அடைந்தோரால் எப்போதும் விரும்பப்படுபவருக்கு (१)

ப்ரஹ்மா முதலிய தேவதா கணங்களால் மதிக்கப்படுபவருக்கு, ஆவரணங்கள் நீங்கியஞானிகளால் சேவிக்கப்படுபவருக்கு,ஞானிகள் கூட்டத்தினால் எப்போதும் கீர்த்தனம் செய்யப்பட வேண்டியவருக்கு பக்தர் குழாத்தின் ஹ்ருதயத் தாமரைகளில் த்யானம் செய்யப்பட வேண்டியவருக்கு (२)

ஸச்சிதானந்த வடிவத்திலிருந்து (துளியும்) மாறுதவருக்கு, ப்ரஹ்மமே நான் என்று த்யானிக்கப்படுபவருக்கு, ஒரு கேஶத்தின் கோடியில் ஒரு பகுதி அளவுக்கு ஸூக்ஷ்மமாகவும் (அணுவாகவும்), ஆகாயம்(ஸர்வவ்யாபக வஸ்துவை) முதலியவற்றைக் காட்டிலும் பெரியதாய் (மஹத்தாகவும்) உள்ளவருக்கு (३)

அந்தராத்மாவினின்று வேறற்ற ஆத்மஸ்வரூபமானவருக்கு, (அறிபவர், அறிவு, அறியப்படும் பொருள் என்ற) மூன்று பக்கங்களை நீக்கி அறியப்படும் ஒரே பொருளாய் இருப்பவருக்கு, ப்ரஸித்தமான புருஷோத்தம ரூபம் உடையவருக்கு, ஸம்ஸாரத்தை விட்டு நீங்கி தண்டத்தைத் தாங்கியவராக இருப்பவருக்கு - (४)

பகுதிகள் முதலிய (தடஸ்த) லக்ஷணங்காலும் லக்ஷிக்கப்படுபவருக்கு, வேதாந்த ஞானமேயாக ஆவிர்பாவம் செய்தவருக்கு, ஸத்வம் முதலிய குணங்களுக்கு அப்பாற்பட்டவருக்கு, முக்காலம் உணர்ந்தறிந்தவருக்கு - (५)

மூலாதாரம் (ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி , ஆஜ்ஞா, ஸஹஸ்ராரம்) ஆகிய ஆறு சக்ரங்களில் பூஜிக்கப்படுபவருக்கு, ஆறு நற்குணங்கள் (ஆந்ரு'ஶம்ஸ்யம், அனுக்ரோஶ: ஶ்ருதம், ஶீலம், த³ம:, ஶம:) என்ற ஸம்பத் நிறைந்தவருக்கு, ஸங்கல்பத்தைத் தவிர (வேறு எந்த ப்ரயாஸையுமின்றி) இருத்தலால் பக்தர்களால் சேவிக்கப்படவேண்டியவருக்கு, (காணபத்யம், கௌமாரம், ஶாக்தம், ஶைவம், வைஷ்ணவம், ஸௌரம்) என்ற ஆறுமத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த ஞானிகளான (ஶங்கராசார்யர் முதலியோரால்) மதிக்கப்படுபவருக்கு - (६)

மாயை மற்றும் அதன் கார்யங்கள் செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்டவருக்கு, ஜீவன் முக்தியை விழைவோர் கூட்டத்தால் மதிக்கப்படுபவருக்கு, நான் பரம்பொருளே, அழிவற்ற வஸ்துவாகவே உள்ளேன் என்று சேவிக்கப்படுபவருக்கு, அனைத்துப் பொருளிலும் உள்ள ப்ரஹ்மம் என்று பூஜிக்கப்படுபவருக்கு வாஸ்து - (७)

த்யானம் முதலிய அனைத்து அனுபவங்களும் அற்றவருக்கு (அதன் மூலம் எட்டாதவருக்கு), வேண்டாமென்று விடுதல், வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளுதல் (என்ற விருப்பு வெறுப்புள்ள இருமை நிலைகளாகிய) தோஷங்களை நீக்குபவருக்கு, மாயையால் மறைக்கப்படுபவருக்கு, ஸ்ரீ ராமச்சந்த்ரேந்த்ரன் என்ற பெயருடன் எவரிடம் முக்தி கிடைக்குமோ அவருக்கு - (८)

ॐ

****

॥ पञ्चम्यन्तगीतम् ॥

ब्रह्ममात्रमसन्नेति यत्नैयन्तेन पद्यते।

स्वमात्रं त्रैपदं तद्धि तस्मात् किञ्चिन्नविद्यते

ப்ரஹ்மம் மட்டுமே கவலைகளேதும் இல்லை என்று எந்த உபநிஷதங்கள் மூலமாக அறியப்படுகிறதோ, அந்த ஆத்மஸ்வரூபம் ஆக மட்டுமே தத்வமஸி என்ற த்ரைபதம் அதுவே, அதனிடமிருந்து (வேறாக) துளிக்கூட இருப்பதில்லை.

पल्लवी

तत्त्रैपदादन्यं न किञ्चिदस्ति तत्स्वमात्रमिति बोद्यान् मुक्तिरस्ति ।

यत्परिव्राजकालिहृद्विभातं यत्सनकादिमौनीशबृन्दगीतम् ।

यत्परमार्थदृक्सकृद्विभातं यत्सर्वापह्नवसिद्धब्रह्मभूतम् ॥ तत्त्रै ॥ १

यत्कलपककल्पनागतिदूरं यदष्टोत्तरशतवेदान्तसारम् ।

यतिरिक्तं नेति ज्ञविहारं यत्पराभूमिविभातब्रह्मतारम् ॥ तत्त्रै ॥ २

यत्तत्वं केनापि वक्तुमशक्यं यत्स्वातिरिक्तं नेतीति ज्ञातुं शक्यम्।

यदाहुर्वेदवत्सूनृतवाक्यं यद्वदन्ति मुनयः कैवल्यशिक्यम् ॥ तत्त्रै ॥ ३

यद्दिव्यनामस्मर्तृमनोमान्द्यं यत्ज्ञानविद्युरजन्मलोकनिन्द्यम् ।

यद्रूपालोकनचक्षुरमान्द्यं यत्परायणज्ञबृन्दं सर्ववन्द्यम् ॥ तत्त्रै ॥ ४

यत्पराद्वयं धामानाद्यनन्तं यद्ब्रह्मसम्यग्ज्ञानमल्पाविद्यान्तम्।

यत्परमाद्वैतमण्डविश्रान्तं यद्रामब्रह्मकैवल्य सीताकान्तम् ॥ तत्त्रै ॥ ५

यन्नानाविधकलनाविरामं यदनन्यभक्तबृन्दं वीतकामम् ।

यन्मायातत्कार्यग्रामविरामं यन्मौनिमण्डलहृदयाभिरामम् ॥ तत्त्रै ॥ ६

यद्वाच्यवाचकभिदाविहीनं यद्भक्तपटलहृदयविमानम् ।

यत्स्वतत्त्वज्ञानं स्वाज्ञानहानं यत्स्वाविद्याभानग्रासभूरिभानम् ॥ तत्त्रै ॥ ७

यदुन्नतोन्नतत्वेन भावितं यत्तत्वं सत्तासामान्यमिति ख्यातम् ।

यत्स्वावशेषतया ब्रह्मजातं यद्रामचन्द्रेन्द्राप्तकैवल्यभूतम् ॥ तत्त्रै ॥ ८

அந்த மூன்று பதங்களைக் காட்டிலும் வேறொன்றுமில்லை அதுவே ஆத்ம ஸ்வரூபமாக உள்ளது என்ற அறியப்படுபவதால் முக்தி உண்டு.

எது ஸந்யாஸிகளின் குழுக்களின் உள்ளங்களில் ஒளிர்கிறதோ, எது ஸநகாதி முனிவர்கள் மற்றும் சிவனால் சேர்ந்து பாடப்பட்டதோ, எது பரமார்த்த தசையில் உடனே அறியப்படுகிறது, எது எல்லாவற்றையும் மறைத்து ப்ரஹ்மம் மட்டுமாக இருக்கிறதோ - (१)

எது கல்பிக்கப்படுவதற்கும் கல்பனைகளுக்கும் வெகு தூரத்தில் உள்ளதோ, எது 1008 வேதாந்தங்களின் ஸாரமாக உள்ளதோ, எதைத் தவிர ஞானம் வசிக்குமிடம் (விஷயம்) வேறு இல்லையோ, எது ஓம்காரம் தாரகப்ரஹ்மம் தோன்றும் பரவெளியாக உள்ளதோ - (२)

எந்த தத்வம் யாராலும் சொல்லப்படமுடியாதோ, எது தன்னைத் வேறொன்றில்லை என்று அறியத் தக்கதோ,எதை வேதத்தைப் போல ஹிதமான வாக்யமாகச் சொல்கின்றனரோ, எதை முனிவர்கள் பரம முக்தியாகக் கூறுகிறார்களோ - (३)

எந்த திவ்யமான பெயர் நினைப்பவருடைய மனத்தை நிதானப்படுத்துகிறதோ, எந்த ஞானத்தால் (அதை) அறிந்தவர்களுக்கு உலகத்தை வெறுத்து ஜன்மமற்ற நிலை கிடைக்கிறதோ, எந்த உருவைக்காண கண்கள் மிகவும் ஆவலாக இருக்கின்றனவோ, எதை சென்று சேர வேண்டிய பரம நிலை என்று அறிந்தவர்களைக் கொண்டதோ, எது எல்லோராலும் வணங்கப்படுகிறதோ - (४)

எது பரமாத்வைதமாக உள்ளதோ, எந்த இருப்பிடம் ஆதியும் அந்தமும் இல்லாமல் உள்ளதோ, எது ப்ரஹ்மம் என்ற சரியான ஞானத்தின் சிறிய அளவிலான அவித்யை என்பதன் முடிவில் உள்ளதோ, எது பரமாத்வைதம் நிறைந்த ஶாந்த ஸ்வரூபமாக உள்ளதோ, எது ப்ரஹ்மமுக்தி நிலையாகவும் சீதையின் மணாளனாகவும் உள்ளதோ - (५)

எது பல்வேறு கார்யங்கள் அற்ற நிலையில் உள்ளதோ, எது வேறெதிலுமன்றி பகுதியிலேயே ஈடுபடும் கூட்டத்தை உடையது, எதோ காமத்தை விட்டதாக உள்ளதோ, எது மாயை மற்றும் அதன் கார்யக் கூட்டத்திலிருந்து விடுபட்டுள்ளதோ, எது முனிவர் கூட்டங்களின் ஹ்ருதயத்திற்கு ஸந்தோஷம் அளிக்கிறதோ - (६)

எது சொல்வது சொல்லப்படுவது என்ற பெயர்கள் அற்றதோ, எது பக்தர் கூட்டங்களின் ஹ்ருதயத்தை இட்டுச் செல்கிறதோ, எந்த தத்வஞானமானது தன்னைப்பற்றிய அஞ்ஞானத்தை நீக்குகிறதோ, எது தனக்குள்ளே தோன்றும் அவித்யை தோற்றத்தை பலவிதத்தில் நீக்கும் ஒளியாக உள்ளதோ - (७)

எது மிகச் சிறந்தவற்றிலெல்லாம் சிறப்பாக இருக்கிறதோ, எந்த தத்வம் ஸத்தா ஸாமான்யம் என்று ப்ரஸித்தமாக அறிய ப்படுகிறதோ, எது தான் என்ற பாகமாகத் (தோன்றுவதும்) ப்ரஹ்மத்திடமிருந்து உண்டானதோ, எது ராமசந்த்ரேந்த்ர (யதி)ருக்குக் கிடைத்த முக்தி ஸ்வரூபமாக உள்ளதோ / ராமசந்த்ரேந்த்ர என்ற பெயரில் கிடைத்த கிடைத்த முக்தி ஸ்வரூபமாக உள்ளதோ - (८)

ॐ

****

॥ षष्ठ्यन्तगीतम् ॥

आनन्दभैरवी

त्रैपदरामचन्द्रस्य स्वानन्यभक्तेष्टदस्य दासोऽहम ।

अथवा स्वेतरभेदग्रासत्रिपाद्रामचन्द्र एवाहम् ॥

மூன்று பாதங்கள் கொண்ட ராமசந்த்ரனுடைய, ஆத்மாவினின்று வேறல்ல என்று பக்தி செலுத்துவோருக்கு வேண்டியன அளிப்பவருடைய, தாஸனுய் உள்ளேன் இல்லாவிடில் நான்-பிறர் என்ற பேதத்தை நீக்கும் த்ரிபாத்ராமசந்த்ரனுகவே உள்ளேன்.

॥ रामचन्द्रस्य - आनन्दभैरवी ॥

पल्लवी

रामचन्द्रस्य तव दासोऽहं नो चेत्त्रैपदराम एवाहम् ॥

दयालो तव दयनीयोऽहं नित्यशुद्धबुद्धब्रह्मैवाहम् ।

पतितपावनपावितोऽहं क्षरादिग्रापराक्षरोऽहम ॥ रा ॥ १

हे करुणाकर तावकोऽहं सकलमहावाक्यवेद्योऽहम्

भक्तवत्सल तव भक्तोऽहं निर्मायशुद्धचैतन्यमहम् ॥ रा ॥ २

सद्गेयत्वद्गीतगायकोऽहं द्वैतजातहानाद्वैतोऽहम् ।

सेवकालिप्रियसेवकोऽहं भावनातीतभूमानन्दोऽहम् ॥ रा ॥ ३

सत्यवचन तेऽनुकम्प्योऽहं स्वाविद्यातत्कार्यविहीनोऽहम् ।

देह्यभयमितियाचकोऽहं तुरीयतुरीयसंविदहम ॥ रा ॥ ४

भक्तालिपक्षरक्षणीयोऽहं सूर्यादिभासकज्योतिरहम् ।

परमसुलभ त्वान्नाथोऽहं परमहंसहृद्विभातोऽहम् ॥ रा ॥ ५

सत्यसङ्कल्प तव तल्पोऽहं सङ्कल्पग्रासनिर्विकल्पोऽहम् ।

सत्यकाम त्वद्भक्तिकामोऽहं सत्यविज्ञान भूमानन्दोऽहम् ॥ रा ॥ ६

भवरुग्वैद्यभवरोग्यहं वाचामगोचरपरमात्माहम् ।

स्वाज्ञानमोचक त्वदज्ञोऽहं स्वज्ञानाविर्भूतचिद्व्योमाहम् ॥ रा ॥ ७

दीनबन्धो तवबन्धुरहं स्वेतरासहसत्तासाम्योऽहम् ।

तपसालिप्रियतापसोऽहं रामचन्द्रेन्द्र कैवल्यमहम् ॥ रा ॥ ८

ராமசந்த்ரனுடைய , உன்னுடைய தாசனுக இருக்கிறேன்! இல்லையெனில் த்ரிபதராமனுகவே உள்ளேன்.

ஓ தயை மிகுந்தவனே! உனது தயைக்கு பாத்திரமாவதாக உள்ளேன்
நித்யமாகவும் சுத்தமாகவும் ஞானமாகவும் உள்ள ப்ரஹ்மமே நானுக உள்ளேன்! கீழே விழுந்தோரைக் காப்பவனுக உள்ளேன்!

ஓ கருணுகரனே! உன்னுடையவனுக உள்ளேன், அனைத்து மஹாவாக்யங்களாலும் அறியப்படும் பொருளாய் இருக்கிறேன், பக்தர்களுக்கு அருளுபவனே உன் பக்தனுக உள்ளேன்! மாயையற்ற சுத்தசைதன்ய ஸ்வரூபமாய் உள்ளேன் - २

நன்ருகப் பாடப்படும் தன்மையதைப் பாடுபவன் நான். த்வைதத்தினுல் உண்டாகுபவற்றை விட்டு அத்வைதமாக இருப்பவன் நான். அடியார்கூட்டத்தினை அன்புடன் சேவிக்கும் அடியேன் நான். எண்ணுவதற்கு அப்பாற்பட்ட அனந்தமான ஆனந்தமாக உள்ளவன் நான். - (३)

ஸத்யவாக்குள்ள உனது தயைக்கு பாத்திரமாகக் கூடியவனுக உள்ளேன்.
ஆத்மவிஷயமான அவித்யையினுல் தோன்றும் செயல்பாடுகள் அற்றவனுக உள்ளேன். "அபயம் அளிப்பாய்" என்று யாசிப்பவனுக உள்ளேன். துரீயதுரீயம் என்னும் (ஶுத்த சைதன்யத்தின் நிலையுடன் ஒடுங்கிய) நிலையில் உள்ள பேரொளி நான். - (४)

பக்தர் கூட்டத்தின் பக்கத்தில காக்கப்பட வேண்டியவன் நான், ஸூர்யன் முதலியவற்றின் ஒளிவிடச்செய்யக்கூடிய ஒளியாக இருக்கிறேன். மிகவும் எளியவனுக உன்னை நாதனுகக் கொண்டவனுகை உள்ளேன். பரமஹம்ஸர்களின் உள்ளத்தில் ஒளிரும் ப்ரஹமஸ்வரூபமாக உள்ளேன். - (५)

ஸத்யமே ஸங்கல்பமாக கொண்டவனுக உன்னுடைய அடியவன் நான், மனத்தின் செயல்பாடுகள் நீங்கிய மாற்றமற்ற பொருளாக உள்ளேன். ஸத்யத்திலேயே விருப்பமுள்ள உன்னுடைய பக்தியை விரும்புபவனுக உள்ளேன். ஸத்யமும் ஞானமுமான ப்ரஹ்மானந்தமாக உள்ளேன். - (६)

ஸம்ஸாரமெனும் வ்யாதிக்கு வைத்யனிடமிருந்து தோன்றிய பவரோகத்தை உடைய ரோகியாக உள்ளேன். வாக்குக்கு எட்டாத பரமாத்ம ஸ்வரூபமாக உள்ளேன். ஆத்மஸம்பந்தமான அஞ்ஞானத்தை நீக்கும் உன்னை அறியாதவனுக உள்ளேன். ஆத்ம ஞானத்தால் உண்டாகும் சிதாகாசமாக உள்ளேன். - (७)

ஹே தீனபந்துவே! உனது பந்துவாக உள்ளேன்! நான் மற்றது என்ற பேதமற்ற அனைத்திலும் பொதுவாய் உள்ள ஸத்தா ஸாமான்யமாக உள்ளேன். தவம் செய்வோரை விரும்பும் தவம் செய்பவனுக உள்ளேன்! ராமசந்த்ரேந்த்ரன் என்ற முக்திநிலையாக உள்ளேன் /ஹே ராமசந்த்ரேந்த்ர! நான் முக்திநிலையாக உள்ளேன். - (८)

ॐ

****

॥ सप्तम्यन्तगीतम् ॥

विदेहकैवल्यधरासुतेशे स्वानन्यभक्तस्वपदप्रदेऽस्मिन् ।

त्रिपाद्विभूतीश्वररामचन्द्रे मदीयचित्तं विलयं प्रयातु ॥

முக்திஸ்வரூபமாய் (விதேஹ நாட்டின் சிறப்பாய்) உள்ள பூமிதேவியின் புதல்வியான சீதாதேவியின் மணாளனிடத்தில் தான் (அவனே) வேறென்றுமில்லை என்ற பக்தியைத் தருபவனிடத்தில், அந்த த்ரிபாத்விபூதி ராமசந்த்ரனிடத்தில் என் சித்தம் ஒடுங்கட்டும்.

विदेह - भैरवी

पल्लवी

विदहकैवल्यसीतारमणे मच्चित्तं लयमेतु नारायणे ॥

स्वकल्पितसर्वाधिष्ठानरूपे समस्तध्यानानुभूतिदुरापे ।

स्वानन्यगतिकभृत्यसुप्रापे सूनृतभाषणश्रीरामभूपे ॥ वि ॥ १

सत्यप्रबोधात्मानन्दलक्षणे स्वशरणागतापन्निवारणे ।

सर्वब्रह्माण्डपटलकारणे भक्तालिमुक्तिदश्रीमच्चरणे ॥ वि ॥ २

नित्यनिर्गुणस्वसंविदाकारे निर्गतविविधभावनाकारे ।

निखिलवेदमस्तकसञ्चारे निर्गतातिशयचिद्ब्रह्मतारे ॥ वि ॥ ३

स्वाविद्यातत्कार्यपूगकारणे स्वानन्दभक्तपटलतारणे ।

स्वनामगायकापन्निवारणे स्वतारनादातीतनारायणे ॥ वि ॥ ४

कल्याणगुणनिचयाभिरामे कारुण्यपूरितभक्तालिकामे ।

कमलाया नित्यविश्रान्तिसीमे कालादिनानाकलनाविरामे ॥ वि ॥ ५

केवलनीरदश्यामलदेहे क्रोधमात्सर्यादिवृत्तिविदाहे ।

कोटिकोटिब्रह्माण्डबृन्दगेहे कुत्सितमायातत्कार्यनिरीहे ॥ वि ॥ ६

चक्रराट् षट्कोणमध्यविहारे चक्रविदारितनक्रेशसारे ।

चातुर्यचमत्कारपारावारे चामीकररचितपीताम्बरे ॥ वि ॥ ७

भजनपरायणहृद्विभाते भक्तिप्रेमान्वितमौनिसेविते ।

भासुरकौस्तुभादिहारान्विते भक्तरामचन्द्रेन्द्रमुक्तिभूते ॥ वि ॥ ८

விதேஹ முக்தி (விதேஹ நாட்டின் சிறப்பு) என்னும் சீதையின் தலைவனிடத்தில், நாராயணனிடத்தில் என் புத்தி ஒடுங்கி நிற்கட்டும்.

அனைத்து த்யானங்களாலும் அனுபவங்களாலும் அடைவதற்கரியவனிடத்தில், தன்னால் கல்பிக்கப்பட்ட அனைத்துக்கும் அதிஷ்டானரூபமாக உள்ளவனிடத்தில், தானன்றி வேறில்லாத நற்கதியை யாருடைய அடியார்கள் எளிதில் அடைவார்களோ அவரிடத்தில் , ஸத்யமாகவும் ப்ரியமாகவும் பேசும் ஸ்ரீராமன் என்ற அரசனிடத்தில் - (१)

உண்மை ஞானமான ஆத்மானந்தத்தின் லக்ஷணத்தில், தன்னிடத்தில் சரணடைந்தவரின் துன்பத்தைப் போக்குபவரிடத்தில், அனைத்து ப்ரஹ்மாண்ட கூட்டங்களிற்கும் காரணமானவரிடத்தில், பக்தர் கூட்டங்களுக்கு முக்தியளிக்கும் ஸ்ரீ ராமனின் பாதங்களில் - (२)

நித்யமான நிர்குணமான பரம்பொருளின் வடிவத்தில், பல்வேறு பாவனைகளும் அற்ற வடிவத்தில், அனைத்து உபநிஷதங்களும் எங்கே ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஸஞ்சரிக்கின்றனவோ, அதைத்தாண்டி ஒன்றுமில்லை எனும் ஓம்கார ப்ரஹ்மத்தில் - (३)

ஆத்ம ஸம்பந்தமான அவித்யை மற்றும் அதனால் உண்டாகும் கார்ய ஸமூஹத்திற்கு காரணமாக உள்ளவரிடத்தில், ஆத்மானந்தத்தில் (மூழ்கிய) பக்தர் கூட்டத்தைக் கரையேற்றுபவரிடத்தில், தன் நாமத்தைப் பாடுபவர்களின் ஆபத்தை நீக்குபவரிடத்தில், ப்ரஹ்மஸ்வரூபத்துக்கு அருகிலிருப்பதாகச் (சொல்லப்படும்) ஓம்கார நாதத்தையும் தாண்டி உள்ள நாராயணனிடத்தில் - (४)

மங்கலமான குணங்கள் கூடி இருக்கும் ராமனிடத்தில், கருணையுடன் பக்தர்க்கூட்டத்திடம் ஆசை கொண்டவரிடத்தில், லட்சுமி நித்யமாக வாசம் செய்யும் பூமியில், காலம் முதலிய பல்வேறு கார்யங்களின் செயல்பாடுகளிலிருந்து தனியே இருப்பவரிடத்தில் - (५)

தனித்த ஜலம் மிக்க கார்மேக வடிவம் கொண்ட ஶரீரம் உள்ளவரிடத்தில், க்ரோதம், பொறாமை முதலிய சித்த வ்ருத்திகளை எரிப்பவரிடத்தில், கோடி கோடி ப்ரஹ்மாண்டங்களின் கூட்டங்கள் எல்லாம் யாருக்கு இல்லமாக (ஸர்வவ்யாபியான படியால்) இருக்கிறதோ அவரிடத்தில், நன்மையற்ற மாயையும் அதன் கார்யங்களுக்கும் வேலையற்ற இடத்தில் - (६)

சக்ரராஜத்தின் (ஸ்ரீ ராமயந்த்ரத்தில்) அறுகோணங்களுக்கு நடுவில் வீற்றிருப்பவரிடத்தில், எவருடைய சக்ரத்தால் முதலைத் தலைவன் வெட்டப்பட்டானோ அவரிடத்தில், சாதுர்யமும் சமத்காரமும் (நிறைந்த பேச்சும் நடத்தையும்) உள்ள ஸமுத்ரத்தில், அழகாக மஞ்சள் பட்டாடை உடுத்தியவரிடத்தில் - (७)

பஜனையை பரம மார்க்கமாக கொண்டோரின் ஹ்ருதயத்தில் தோன்றுபவரிடத்தில், ப்ரேமபக்தி நிறைந்த முனிவர்களால் சேவிக்கப்படுபவரிடத்தில், ஒளிமிக்க கௌஸ்துப ஹாரம் அணிந்தவரிடத்தில், ராமசந்த்ரேந்த்ரர் என்ற பக்தரின் முக்தியாக உள்ளவனிடத்தில் / பக்தர்களுக்கு எந்த ராமசந்த்ரேந்த்ரன் முக்தி ஸ்வரூபமாக உள்ளானோ அவனிடத்தில் - (८)

ॐ

****